## தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

## M.C.No. 16/2023

RW : 2

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. பாலாஜி | த / பெ. | திரு.வடிவேல் |
| கிராமம் | : | நன்னிலம் | தாலுக்கா | நன்னிலம் |
| தொழில் | : | விவசாயம் | வயது | 65 |

**முதல்விசாரணை**

நான் இந்த மனுவில் தரப்பினர் இல்லை. நான் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி 2 ஆக சாட்சியமளித்துள்ளேன். எனது தரப்பில் எழுத்துமூல நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட சங்கதிகள் உண்மையானவை. அவை என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டது. அவை உண்மையானவை. எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் இல்லை. என் சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

மனுதாரரும், எதிர்மனுதாரரும் கணவன், மனைவி என்றால் சரிதான். 1,2 ம் மனுதாரர்கள் 2 ம் மனுதாரரின் பெற்றோர்கள் வீட்டில் இருக்கிறார்கள் என்றால் சரிதான். எந்த வருடம், மாதம், தேதியில் பஞ்சாயத்து பேசினேன் என்றால் குறிப்பாக தேதி, மாதம், வருடம் சொல்ல இயலாது. பலமுறை பஞ்சாயத்து பேசப்பட்டுள்ளது. 2 ம் மனுதாரரை எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ சொன்னோம். அவர் வரவில்லை. எதிர்மனுதாரருக்கு சட்டப்படி

நடவடிக்கை எடுக்க ஆலோசனை சொன்னேனா என்றால் சொன்னேன். அதன்பிறகு வழக்கு நிலுவையில் இருப்பதாக சொன்னார்.

வழக்கு தீர்வு குறித்து நான் தெரிந்து கொள்ளவில்லை. சுமார் 1 வருடத்திற்கு முன்பு 1ம் எதிர்மனுதாரரின் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. பூச்சி மருந்து குடித்ததாக சொல்வது எந்த வருடம் என்றால் அது ஞபாகம் இல்லை. எலும்பு முறிவு விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் எனது ஊரை சேர்ந்தவர் என்பதால், எந்த விவரமும் தெரியாமல் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குடும்பத்தில் நடந்திருக்கும் பிரச்சனை குறித்து எனக்கு தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை என்றாலும், இந்த எதிர்மனுதாரர் அதிகமாக மது அருந்தி விட்டு, மனுதாரர்களை வீட்டைவிட்டு துரத்தி விட்டு ஜீவனாம்சம் கொடுக்காமல் இருப்பதற்காக என்மூலம் பொய் சாட்சியம் அளிக்க ஏற்பாடு செய்துள்ளார் என்பதால் எனது சாட்சியம் நிராகரிக்க தகுந்தது என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA
Digitally signed by LATHA
Date: 2026.04.02 18:22:02 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்